கழக இளைஞர் அணி சார்பில் நடத்தப்பட்ட முத்தமிழறிஞர் கலைஞரின் 102-வது பிறந்த நாள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் 4 ஆண்டு

# சாதனை விளக்க தெருமுனைக் கூட்டங்கள்!



கொடைக்கானல் மேல்மலை ஒன்றியம்,
திண்டுக்கல் கிழக்கு மாவட்டம்.




கோட்டை பகுதி,
சேலம் மத்திய மாவட்டம்



திமிரி மேற்கு ஒன்றியம்,
இராணிப்பேட்டை மாவட்டம்.



வெம்பாக்கம் மத்திய ஒன்றியம்,
திருவண்ணாமலை வடக்கு மாவட்டம்.



கிருஷ்ணராயபுரம் மேற்கு ஒன்றியம்,
கரூர் மாவட்டம்.



சேரன்மகாதேவி மேற்கு ஒன்றியம்
திருநெல்வேலி கிழக்கு மாவட்டம்.



முதலமைச்சர் அவர்கள் கிருஷ்ணகிரி அரசு ஆடவர் கலைக்கல்லூரி வளாகத்தில், நடைபெறும் நிகழ்ச்சியில், புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, முடிவுற்ற பணிகள் துவக்கி வைத்தல் மற்றும் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க உள்ளதையடுத்து, முன்னேற்பாடு பணிகளை, உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமார் , கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர், சட்டமன்ற உறுப்பினர் மதியழகன் , மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் , பொதுக்குழு உறுப்பினர் நாகராசன் மற்றும் அதிகாரிகள் உடன் இருந்தனர்.

# கரூரில் முப்பெரும் விழா முன்னேற்பாட்டு பணிகள் - வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. ஆய்வு!

கரூர், செப். 11-

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசிகளுடன், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, கரூர் கோடங்கிப்பட்டியில், வருகின்ற செப்டம்பர் 17 அன்று கழகத்தின் கொள்கை திருவிழாவாம், தி.மு.க முப்பெரும் விழா நடைபெற இருக்கின்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை மாவட்டச் செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. பார்வையிட்டார். பின்னர் வி.செந்தில் பாலாஜி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

திராவிட மாடல் நல்லாட்சியை நடத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, வருகிற செப்டம்பர் 17ம் தேதி கரூரில் நடைபெறும் முப்பெரும் விழாவிற்கான ஏற்பாடுகள் மிக சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதுவரை இல்லாத அளவிற்கு வரலாற்றில் முக்கியத்துவம் வாய்ந்த முப்பெரும் விழாவாக அமைய அனைத்து நிர்வாகிகளும் இணைந்து பணிகளை முன்னெடுத்து இருக்கின்றோம்.

திமுக வரலாற்றில் முப்பெரும் விழா என்பது வரக்கூடிய சட்டமன்ற தேர்தலை எதிர் கொள்ளக்கூடிய வகையில் மிகச் சிறப்பாக அமைய இருக்கின்றன. ஏறத்தாழ இந்த முப்பெரும் விழாவில் ஒரு லட்சம் இருக்கைகள் போடுவதற்கான பணிகளை முன்னெடுத்துள்ளோம். ஒரு லட்சம் இருக்கைகள் என்றால் எத்தனை லட்சம் மக்கள் கலந்து கொள்வார்கள் என்பதை நீங்கள் கணித்துக் கொள்ளலாம். அந்த அளவுக்கு ஆட்சியின் நான்காண்டு சாதனைகளை எடுத்துச் சொல்லுகின்ற அளவில், முப்பெரும் விழா நடைபெற இருக்கிறது. கூடுதலாக வருபவர்களுக்கும் ஏற்பாடுகள் செய்ய பணிகள் நடைபெற்று வருகின்றது.

கரூர் மாவட்டத்தில் கழக முப்பெரும் விழா நடத்து வதற்கான அனுமதிகளை வழங்கிய கழகத் தலைவர், முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு கரூர் மாவட்ட கழகத்தின் சார்பில் கோடான கோடி நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கு உறுதுணையாக இருந்த கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

எவ்வளவு வாகனங்கள் வரும் என்பதை பொறுத்து வாகனங்கள் நிறுத்தும் இடவசதி செய்யப்படும். கரூர் மாவட்டத்தில் ஒவ்வொரு தொகுதியாக செயல்வீரர்கள் கூட்டம் நடத்தப்பட்டிருக்கிறது. அடுத்து மாநகர, நகர, ஒன்றிய, பேரூர் வாரியாக ஆலோசனை நடத்தப்படும். மேலும் அதிக அளவில் முப்பெரும் விழாவிற்கு வருவார்கள் என எதிர்பார்த்து முன்னேற்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருகின்றன

இவ்வாறு அவர் கூறினார்.

## தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

## மாவட்ட அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

**சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு செயலாளர் டாக்டர் அ.சுபேர்கான் அறிவிப்பு!**

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவின் திருப்பூர் வடக்கு, ஈரோடு வடக்கு ஆகிய மாவட்டங்களின் அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

### திருப்பூர் வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் - ம. ஜான் வல்தாரிஸ் 11, பெரியார் நகர், அனுப்பர்பாளையம், திருப்பூர் - 641652.

துணை அமைப்பாளர்கள் - 1) எ. செந்தில்குமார் 5/78, பிச்சம்பாளையம், சக்தி தியேட்டர் ரோடு, திருப்பூர் - 641603. 2) ச. தாரிக் முகமது 6/112, மங்கலம் ரோடு, திருப்பூர் - 641654. 3) சா. மகிழவன் 3/143, சி.எஸ்.ஐ. வீதி, கருவலூர், அவிநாசி - 641670, திருப்பூர் மாவட்டம். 4) எம். முஷாபர் அகமது 1/1180, அழில் நகர், நெரிப்பெரிச்சல், திருப்பூர் - 641666. 5) ஜெ. பிரவீன் ஜோசப்ராஜ் 186ஏ, சி.எஸ்.ஐ. வீதி, பெருமாநல்லூர், திருப்பூர் - 641666.

### ஈரோடு வடக்கு மாவட்டம்

தலைவர் - **கே.ஆர்.சபியுல்லா,** நகராட்சி பாடசாலை, வடக்கு வீதி, சத்தி.

துணைத் தலைவர் - எஸ்.பி. முஜிபுல்லா, 38. நகராட்சி பள்ளி வடக்கு வீதி-1 சத்தியமங்கலம். ஈரோடு மாவட்டம்

அமைப்பாளர் - சி.ராஜேந்திரன், 1/83, சி.எஸ்.ஐ.தெரு கடுக்காம்பாளையம்(அ), கோபி.

துணை அமைப்பாளர்கள் - 1) அ.நாசர், 214, முல்லை நகர், நல்லூர் அஞ்சல், புளியம்பட்டி. 2) மு.தஸ்தகீர், 7, அம்மன்நகர், நல்லகவுண்டன்பாளையம், லக்கம்பட்டி, கோபி. 3) ஜி.எஸ்.தீலிப், 33, சாரதா மாரியம்மன் கோவில் தெரு, கோபிசெட்டிபாளையம். 4) எஸ்.யாகூப், புஞ்சைதுறையாம்பாளையம், பங்களாபுதூர், டி.என். பாளையம். 5) ஞா.அசோக் மேசாக், 4/559, கவிதா நகர், எஸ்.பி.நகர் அருகில், கோபிசெட்டிபாளையம்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 09-09-2025.

**டாக்டர் அ.சுபேர்கான்**
செயலாளர்
தி.மு.க. சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு

கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு

# தமிழ்நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை கணிசமாக உயர்வு!

## சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தகவல்!

சென்னை,செப்.11-

முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று முன்தினம் (09.09.2025) சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில், மாவட்ட வாரியாக சுற்றுலா வளர்ச்சி திட்டப் பணிகள் குறித்து சுற்றுலா அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் சென்னை, வாலாஜா சாலையில் அமைந்துள்ள சுற்றுலா வளாகத்தில் நடைபெற்றது.



இந்த ஆய்வுக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, சுற்றுலாத்துறையில் பல்வேறு வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன் காரணமாக, இந்தியாவிலேயே உள்நாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகையில் தமிழ்நாடு இரண்டாவது இடத்தை வகிக்கிறது. ஜூலை 2025 வரை உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை 20.35 கோடி ஆகவும், வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை 7.80 இலட்சம் ஆகவும் உள்ளது.

தமிழ்நாட்டில் பொழுதுபோக்கு சுற்றுலா, பாரம்பரிய சுற்றுலா, ஆன்மீக சுற்றுலா, பண்பாடு சுற்றுலா, மருத்துவச் சுற்றுலா மற்றும் UNESCO போன்ற புராதன சின்னங்கள் சுற்றுலா என பல்வேறு வகையான சுற்றுலாத் தளங்கள் அமையப்பெற்றுள்ளதால், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் வருகை ஆண்டுதோறும் வெகுவாக உயர்ந்து வருகிறது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள சுற்றுலாத் தலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகள், இணைய வழி சுற்றுலா வழிகாட்டி வசதிகள், சுற்றுலாப் பயணிகளின் மனதில் நீங்காத மகிழ்ச்சியான சுற்றுலா அனுபவங்களை அளிக்கும் மலை ஏறுதல், மலைப்பகுதிகளில் தங்குதல் என சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில் பல்வேறு திட்டங்களை மாவட்டந்தோறும் உருவாக்கி, சுற்றுலாப்பயணிகளின் வருகையை உயர்த்தும் வகையிலும், வருவாய் அதிகரிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள சுற்றுலா அலுவலர்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆலோசனை வழங்கினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், , சுற்றுலா இயக்குநர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ், , கண்காணிப்பு பொறியாளர், திட்டப் பொறியாளர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் அனைத்து மாவட்ட சுற்றுலா அலுவலர்கள், ஆகியோர் கலந்து கொண்டனர்.




கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் நல்லாசியுடன், கரூரில் வருகின்ற செப்டம்பர் 17 அன்று நடைபெறவிருக்கும், தி.மு.க முப்பெரும் விழா ஏற்பாடுகள் குறித்தான செயல் வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கூட்டம், அரவக்குறிச்சி சட்டமன்ற தொகுதி, சின்னதாராபுரம் சிவசெல்வி மஹாலில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினார். அரவக்குறிச்சி எம்.எல்.ஏ. பி.ஆர்.இளங்கோ, உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் மற்றும் திரளான தொண்டர்கள் கலந்து கொண்டனர்.